தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு</u>

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 21 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக அங்குள்ள அணைகள் நிரம்பியதையடுத்து, உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது.இதைத்தொடர்ந்து, கடந்த 10-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. தொடக்கத்தில் நொடிக்கு 6 ஆயிரம் கன அடியாக திறந்துவிடப்பட்ட தண்ணீர், பின்னர், நொடிக்கு 12 ஆயிரம் கன அடியாக உயர்த்தப்பட்டது. தற்போது, காவிரி டெல்டா மாவட்டங்களில் பாசனத்துக்கு தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால், வியாழக்கிழமை காலை முதல் மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 16 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இது மாலையில் 21 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. கர்நாடக மாநிலத்தில், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வந்த மழை குறைந்ததால் கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து சரிந்தது. இதனால், அந்த அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. எனவே, மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை, நொடிக்கு 7,732 கன அடியாகவும், நீர்மட்டம் 112.30 அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 81.72 டி.எம்.சி.யாக இருந்தது. நீர்வரத்தை விட திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கியுள்ளது. ஒகேனக்கல்... ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து இரண்டாவது நாளாக வியாழக்கிழமை நொடிக்கு 9,000 கன அடியாக இருந்தது. காவிரியில் நீர்வரத்து குறைந்து வரும் நிலையில், புதன்கிழமை நீர்வரத்து 9,000 கன அடியாக இருந்தது. நீர்வரத்து குறைந்ததையடுத்து, ஒகேனக்கல்லுக்கு

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

## தேசிய எலுமிச்சை ஆராய்ச்சி மையம்: சங்கரன்கோவில் அருகே இடம் ஆய்வு

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் பகுதியில் தேசிய எலுமிச்சை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்காக சின்னக்கோவிலான்குளம் அருகே அரசுப் புறம்போக்கு நிலத்தை மாவட்ட வருவாய் அலுவலர், வேளாண்மை அதிகாரிகள் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த பேரவைக் கூட்டத்தில் சங்கரன்கோவிலில் தேசிய எலுமிச்சை ஆராய்ச்சி மையம் ரூ. 4 கோடி மதிப்பில் அமைக்கப் படும் என அறிவித்தார். இதையடுத்து சங்கரன்கோவில் பகுதியில் எலுமிச்சை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்காக நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த மையத்துக்கு 50 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால் பிரதான சாலை சந்திக்கும் கிராமப் பகுதிகளில் இடம் தேர்வுசெய்யும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. சங்கரன் கோவிலிலிருந்து ஊத்துமலை செல்லும் வழியில் உளள சின்னக்கோவிலான்குளம் மலையடிவாரத்தில் 300 ஏக்கர் அளவில் அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்தை மாவட்ட வருவாய் அலுவலர் குழந்தைவேல், சங்கரன்கோவில் எம்எல்ஏ முத்துசெல்வி, தோட்டக்கலைத் துறை ஆராய்ச்சி இயக்குநர் மகேஸ்வரன், கோவை தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் மாரியப்பன், பெரியகுளம் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் பாலமோகன் உள்ளிட்டோர் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர். பிரதான சாலையில் உள்ள அந்த இடத்தில் மண்வளம், நீர்வளம் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இதற்காக மலையடிவாரத்தைச் சுற்றி 4 இடங்களில் குழி தோண்டப்பட்டு மண்ணும், ஆழ்துளைக் குழாய் அமைத்து தண்ணீரும் ஆய்வுக்காக எடுக்கப்பட்டன. மேலும், அங்குள்ள விவசாயத்துக்குப் பயன்படும் கிணறுகளில் உள்ள நீர் இருப்பு குறித்தும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

## நெல் சாகுபடியில் உற்பத்திச் செலவை குறைக்கும் உயிர் உரங்கள்

நெல் சாகுபடி செய்யும்போது உயிர் உரங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு குறைகிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் அதே சமயத்தில், உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்கள் தரமானதா?, சத்தானதா? என்ற விழிப்புணர்வும் நுகர்வோரிடம் அதிகரித்து வருகிறது. நாளுக்கு நாள்

அதிகரித்துக் கொண்டே வரும் ரசாயன இடுபொருள்களின் செலவுகள் அவற்றால் மண்ணிற்கும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் மாற்று முறை விவசாயத்திற்கு குறிப்பாக, இயற்கை விவசாயத்திற்கு வழிகோலாக அமைகிறது.மேலும், ஊட்டச்சத்து மேலாண்மையில் ரசாயன உரங்களின் செலவைக் குறைத்து அதற்கு இணையான சத்துக்களை வழங்குவதில் பெரிதும் துணை நிற்பவை உயிர் உரங்களே. அத்தகைய உயிர் உரங்கள், நெல் பயிர் சாகுபடியில் ஏற்படுத்தும் நிகழ்வுகள் குறித்து ஈரோடு மாவட்ட மத்திய வேளாண் அறிவியல் நிலையத்தின் உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் (மைராடா) ச.சரவணகுமார் கூறியது: நெல் உற்பத்தியை அதிகரிக்க உதவும் முக்கிய ஊட்டச்சத்துக்களாக கருதப்படுபவை தழை, மணிச் சத்துக்களாகும். அத்தகைய இரண்டு சத்துக்களும் இயற்கையாகவே வளி மண்டலம், மண்ணில் பயிருக்கு எட்டா நிலையில் உள்ளன. இதுபோன்ற சத்தினை கூட்டு, தனித்து வாழும் பாக்டீரியாக்கள் கிரகித்து பயிருக்கு வழங்குகின்றன. நெல் வயல்களில் தழை, சாம்பல் சத்தை நிலை நிறுத்துவதில் அசோஸ் பைரில்லம், அசட்டோபேக்டர், பாஸ்போ பாக்டீரியா, அசோலா போன்றவை பெரும்பங்காற்றுகின்றன.

**தழைச்சத்து வழங்கும் நுண்ணுயிர்கள்:** பல்வேறு வகையான பாக்டீரியாக்கள் தழைச் சத்தை நிலை நிறுத்தினாலும் அவற்றில் முக்கியப் பங்கு வகிப்பது அசோஸ்பைரில்லம். இதை ஒரு ஹெக்டேருக்கு பரிந்துரைக்கப்படும் விதையுடன் 600 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்தும் அல்லது நாற்றுகளை பறித்து, அதன் வேர்களை 1,000 கிராம் அசோஸ்பைரில்லத்தில் நனைத்து நடுவதாலும் தழைச்சத்து உரப் பயன்பாட்டைக் குறைக்கலாம். இவை இரண்டையும் பின்பற்ற இயலாதபட்சத்தில் 1 ஹெக்டேருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லத்தை 25 கிலோ மக்கிய குப்பையுடன் கலந்து நடவிற்கு முன் வயலில் இடலாம். வேர்ப் பகுதியில் கூட்டு வாழ்க்கை நடத்தி தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு வழங்குகின்றன. மேலும், பாசி வகையைச் சேர்ந்த நீலப்பச்சைப் பாசி, பெரணி வகையைச் சேர்ந்த அசோலாவும் நெல் வயல்களில் தழைச்சத்து வழங்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

**மணிச்சத்து வழங்கும் நுண்ணுயிர்கள்:** மண்ணிலுள்ள மணிச்சத்தைக் கரைத்து பயிருக்கு வழங்கும் பாஸ்போ பாக்டீரியாவானது வளர்ச்சி ஊக்கிகளையும் சுரக்கின்றது. இதனால், மணிச்சத்தின் தேவையும் குறைந்து பயிர் வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படுகிறது. நெல் பயிரின் வேர்களில் நுழைந்து, வேரிழைகளை

உண்டாக்கி, தொலைவிலுள்ள மணிச்சத்தை ஈர்த்து வழங்குவதில் மைக்கோரைஸா முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, அசோஸ்பைரில்லத்தைப் போலவே இந்த நுண்ணுயிர் உரங்களையும் பயன்படுத்தி (விதை நேர்த்தி, நிலத்தில் இடுதல்) மணிச்சத்திற்கான ரசாயன இடுபொருள்களின் தேவையைக் குறைக்கலாம். ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள நெல் வயலில் தனித்து வாழும் பாக்டீரியாவான அசட்டோபேக்டர் 15 கிலோவும், நீலப்பச்சைப் பாசி 40 கிலோவும், இணை வாழ்க்கை நடத்தும் பாக்டீரியாவான அசோஸ்பைரில்லம் 35 கிலோ தழைச்சத்தையும் நிலை நிறுத்துகின்றன. கூட்டு வாழ்க்கை நடத்தும் அசோலாவானது 40 முதல் 60 கிலோ தழைச்சத்தையும், பசுந்தாள் உரப் பயிர்கள் 80 கிலோ தழைச்சத்தையும் பயிருக்கு வழங்குகின்றன. மேலும், இத்தகைய நுண்ணுயிர்கள் வளர் ஊக்கிகளையும் சுரப்பதால் பயிர் செழுமையாக வளர உதவுகின்றன. மேலும், மண்ணிலுள்ள அங்ககச் சத்துடன் நுண்ணுயிர்கள் சேர்ந்து வாழ்வதால் மண் வளம் பாதுகாக்கப்படுவதுடன், வளம் குன்றா நெல் சாகுபடியைப் பெற்று பயனடையலாம் என்றார்.

## <u>கால்நடைகளின் வரப்பிரசாதமான கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்!</u>

விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் கால்நடைகளுக்கு ஏற்ற சத்தான தீவனமாகவும், கால்நடை வளர்ப்பில் உப தொழிலாகவும் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ-4 விளங்குகிறது. தமிழகத்தில் கால்நடை வளர்ப்பு என்பது உழவுத்தொழிலின் உப தொழிலாக உள்ளது. பொதுவாக, கால்நடைகளுக்கு வைக்கோல், சோளம், கம்பு, மக்காச்சோளத்தின் தட்டை, வேர்க்கடலைக் கொடி ஆகியவை முக்கிய உணவாக வழங்கப்படுகின்றன. ஆனால், கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்றால் சத்தான தீவனம் அளிக்க வேண்டும். அந்த வகையில், கால்நடைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது கம்பு நேப்பியர் ஒட்டுப்புல். தீவனப்புல் வகையில் குறைந்த இடத்தில், குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தன்மை கம்பு நேப்பியர் ஒட்டுப் புல்லுக்கு உண்டு. இது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் 2008-ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. **சிறப்புகள்:** அதிக தூர்கள் இருத்தல், மிக மிருதுவான இனிப்பான சாறு நிறைந்த தண்டுகள், அதிக இலை தண்டு விகிதம், பூச்சித் தாக்குதல் அற்றது. ஆண்டுக்கு ஏழு முறை அறுவடை செய்யலாம். இதுகுறித்து, திரூர் வேளாண் அறிவியல்

ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் அகிலா கூறியது: கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் என்பது கால்நடைகளுக்கு சிறந்த சத்தான தீவனமாகும். இந்த கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், குறைந்த செலவில் உபப் பயிராக இட்டு விவசாயிகள் பயனடையலாம். நல்ல நீர்ப்பாசன வசதி இருந்தால் இந்தப் புல்லை ஆண்டு முழுவதும் நடவுச் செய்யலாம். நன்கு உழுது தயார் செய்த நிலத்தில் 50 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து, பார்களின் சரிவில் 50 செ.மீ. இடைவெளியில் ஒரு கரணை என நடவுச் செய்ய வேண்டும். இதுபோல், நடவு செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் கரணைகள் தேவைப்படும். வயலில் கரணைகளை நடவுச் செய்யும் முன் 1 ஹெக்டேருக்கு 110 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர், 68 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடி உரமாக இடவேண்டும். ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும், ஒரு ஹெக்டேருக்கு 165 கிலோ யூரியா இட வேண்டும். இதுகுறித்து உதவிப் பேராசிரியர் நிர்மலா கூறியது: இந்தத் தீவனப் புல்லை தரையில் இருந்து 15 முதல் 20 செ.மீ. உயரத்தில் வெட்டி, கால்நடைகளுக்கு அளிக்கலாம். முதல் அறுவடை நடவு செய்து 70 முதல் 80 நாள்களுக்குள் அறுவடை செய்யலாம். மற்ற அறுவடைகளை தொடர்ச்சியாக 45 நாள்கள் இடைவெளியில் அறுவடைச் செய்யலாம். மேற்கண்ட முறையில் நன்குப் பராமரிக்கப்பட்ட பயிரில் ஒரு ஹெக்டேருக்கு ஒரு வருடத்தில் 300 முதல் 350 டன் வரை பசுந்தீவனத்தை அறுவடைச் செய்ய முடியும். மேலும் திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கரணைகள் கிடைக்கும். விவசாயிகள், அதை வாங்கி நடவுச் செய்யலாம். தற்போது மழை பெய்து மண்பக்குவத்தில் இருப்பதால் எளிதில் நடவுச் செய்ய முடியும் என்றார் அவர்.

**<u>கோமாரி நோய்த் தடுப்பூசியை அனைத்து கால்நடைகளுக்கும் போட வேண்டும்</u>**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய்த் தடுப்பூசியைப் போட வேண்டும் என்று கால்நடைத் துறை அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்தில் செப்டம்பர் 1 முதல் 21-ம் தேதி வரை 7-வது சுற்றாக கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம்கள் நடத்தப்படுகிறது. இப்பணியை 100 சதவீதம் சிறப்பாக செய்து முடிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை

வகித்துப் பேசுகையில், மாவட்டத்தில் 100 சதவீதம் அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணியில் கால்நடைத் துறை அதிகாரிகள் ஈடுபட வேண்டும். ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சியின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் இப் பணியில் முழுமையாக ஈடுபட வேண்டும். தடுப்பூசி போடும் முகாம்கள் நடைபெறும் தேதி உள்ளிட்ட விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்யும் பணியில் ஊராட்சித் தலைவர்கள் ஈடுபட வேண்டும். மொத்தத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் விடுபடாமல் கோமாரி நோய்த் தடுப்பூசி போட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். இக் கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சி.ஏ.செல்வராஜி, உதவி இயக்குநர்கள் கே.மணி, பி.செல்லன், பால்வளத் துறை துணைப் பதிவாளர் முனிராஜ், ஆவின் பொது மேலாளர் பெரியசாமி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர்கள் நரசிம்மன், சுந்தர்ராஜன் மற்றும் கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், ஆவின் கால்நடை மருத்துவர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள், பால் கூட்டுறவு சங்க கிராம அளவிலான பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>பூச்சி மருந்து நிறுவனங்களில் வேளாண்துறையினர் ஆய்வு</u>**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள உரம், பூச்சி மருந்து நிறுவனங்களில் ஒரே சமயத்தில் வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது சம்பா பருவ நெல் சாகுபடி தீவிர மடைந்துள்ள நிலையில், இந்த நிதியாண்டுக்கு தேவையான இடுபொருள் களான விதைகள், உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை வேளாண்மை விரிவாக்க மையம், தனியார் நிறுவனங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடியானது சுமார் 50 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, 80 சதவீதம் பரப்பில் திருந்திய நெல் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது. இதையொட்டி, தனியார் நிறுவனங்களில் விற்கப்படும் உரம், பூச்சி மருந்துகள் தரமானதாகவும். சரியான விலையிலும் சட்டப்படி விற்பனை செய்யப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்வதற்கு

பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உரம், பூச்சி மருந்துக் கடைகளையும் கடந்த ஆகஸ்ட் 18-ஆம் தேதி முதல் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். ஆய்வின்போது 78 உரம், பூச்சி மருந்து நிலையங்கள் சட்ட விதிமுறைகளை மீறி செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், உரம், பூச்சி மருந்து சட்டத்தை மீறி செயல்பட்டதற்காக, இந்த மாவட்டத்தில் உள்ள 18 விற்பனை நிலையங்களுக்கு சுமார் ரூ.20 லட்சம் மதிப்பிலான உரம், பூச்சி மருந்துகள் விற்பனை செய்ய தடைவிதிக்கப்பட்டது. 25 விற்பனை நிலையங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் ஆய்வு, விவசாயிகளுக்கு தரமான உரங்கள், பூச்சிமருந்துகள் சரியான விலையில் கிடைப்பதற்கு வழிவகுத்துள்ளது. சம்பா பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான வேளாண்மை இடுபொருள்கள். வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டும். இதற்காக மானியத் திட்டங்களான தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், தேசிய எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் பணை இயக்கம், விதை கிராமம் திட்டம், அட்மா திட்டம் ஆகியவற்றை தமிழ்நாடு அரசு வேளாண்துறை சார்பில் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் தங்கள் தேவைக்கு வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் தொடர்பு மையத்தை 044-27662852 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என வேளாண் இணை இயக்குநர் சுந்தரராஜன் கூறியுள்ளார்.

## 30 கிராமங்களில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்: ஆட்சியர்

திருவாரூர் மாவட்டத்தில் 30 கிராமங்களில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லாத கிராமங்களில் புதிதாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க 30 கிராமங்கள் தேர்வு செய்யப்படவுள்ளது. எனவே, நெல் கொள்முதல் நிலையம் இல்லாத கிராமங்களில் உள்ள விவசாயிகள் 33 சென்ட் நிலத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு இலவசமாக வழங்க முன்வந்தால் அங்கு

நெல்கொள்முதல் நிலையம் அரசு செலவில் கட்டிக்கொடுக்கப்படும். விவசாயிகள் இவ்வாய்பை பயன்படுத்திக் கொண்டு அரசால் அறிவிக்கப்படவுள்ள 2014-2015 -ம் ஆண்டு பட்டியலில் இடம் பெற்று பயனடையலாம். தவிர கொள்முதல் நிலையம் கட்ட இடம் தர முன்வரும் விவசாயிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் ஆ. அழகிரிசாமியை 9442255542 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டம்**

திருவாரூரில் மாவட்ட அனைத்து விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு காவிரி பாசன விவசாயிகள் பாதுகாப்பு சங்கத் தலைவர் துரைராஜன் தலைமை வகித்தார். விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர். பாண்டியன், நிர்வாகிகள் பழனிவேலு, முருகேசன், சேதுராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: புதிய பயிர்க் காப்பீடுத் திட்டத்தை கைவிட்டு, பழைய பயிர்க் காப்பீடுத் திட்டத்தையே தொடர வேண்டும். விவசாயிகள் 2012 -13 ஆம் ஆண்டு பெற்றுள்ள கடன்களை ரத்து செய்ய வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆக. 26-ம் தேதி முற்றுகைப் போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பருத்திக்கு அடியுரமாக நுண்ணூட்டக் கலவை இடுவது அவசியம்**

பருத்திக்கு அடியுரமாக நுண்ணூட்டக் கலவை இடுவது அவசியம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழையின் தீவிரத்தால் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் பருத்தி பயிரை மானாவாரியாக விதைப்பு செய்து வருகின்றனர். இந்த தருணத்தில் அடியுரமாக பருத்தி பயிருக்கான நுண்ணூட்டக் கலவை இடுவது மிகவும் அவசியமானது. மானாவாரி பருத்தி பயிரில் சப்பைகள் காய்ந்து கொட்டுதல், இலைகள் சிவப்பாக மாறி கொட்டுதல் ஆகியவற்றால் மகசூல் இழப்பு பெரிதும் ஏற்படுகிறது. இதைத் தடுக்க பருத்தி பயிருக்கென

தயாரிக்கப்பட்ட அடியுரமாக இடும் நுண்ணூட்டக் கலவையை, ஒரு ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் மணல் அல்லது மட்கிய தொழு உரத்துடன் கலந்து வயல் முழுவதும் விதை விதைத்த பின்னர் சீராக தூவ வேண்டும். இந்த நுண்ணூட்டக் கலவையை யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட பேரூட்ட சத்துக்களுடனோ, நுண்ணுயிர்களுடனோ கலந்து பயன்படுத்தக் கூடாது. பருத்தி நுண்ணூட்டக் கலவையை அடியுரமாக பயன்படுத்தும்போது, சப்பைகள் காய்ந்து கொட்டுதல், இலைகள் சிவப்பாக மாறுவது குறைவதோடு பருத்தி செடிகள் பேரூட்டச் சத்துக்களை விரைவாக எடுத்துக் கொண்டு செழிப்பாக வளரவும் துணை புரிகிறது. இந்த நுண்ணூட்டக் கலவையானது, பெரம்பலூர் மாவட்டத்தின் அனைத்து வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களில் எளிதாக கிடைக்கின்றன. எனவே பருத்தி விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் உதவி அலுவலர்களை அணுகி பருத்தி நுண்ணூட்டக் கலவையைப் பெற்று பயனடையலாம். மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை நேரில் அணுகலாம்.

**"சம்பா சாகுபடிக்கு தேவையான உரம்,விதைகளை இருப்பு வைக்க வேண்டும்'**

நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் மற்றும் விதைகளை போதுமான அளவில் இருப்பு வைக்க வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி. நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சம்பா நெல் சாகுபடிக்கான முன்னேற்பாடுகள் குறித்து கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண் துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் பேசியது: சம்பா நெல் சாகுபடிக்கு தேவையான உரம் மற்றும் விதைகளைப் போதுமான அளவில் கையிருப்பில் வைக்க கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைகள் சான்று பெற்ற விதைகளாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறை மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில், சிறப்பாகப் பணியாற்றி சம்பா நெல் சாகுபடி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார் ஆட்சியர். பதிவாளர் அலுவலக கூடுதல் பதிவாளர் ஆர். கார்த்திகேயன், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய கூடுதல் பதிவாளர் பி. பாலமுருகன் மற்றும் கூட்டுறவுத் துறை, வேளாண் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு

கர்நாடகத்தில் வியாழக்கிழமை தொடங்கி அடுத்த 72 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து பெங்களூரு வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை: கடந்த 24 மணி நேரத்தில் தென் கர்நாடகத்தின் உள்பகுதியில் தென் மேற்குப் பருவமழை தீவிரமாகக் காணப்பட்டது. ஆனால், கடலோர கர்நாடகத்தில் பலவீனமாக இருந்தது. கடலோர கர்நாடகம், வட கர்நாடகத்தின் உள்பகுதிகளில் ஒருசில இடங்களில் மட்டுமே மழை பெய்தது. சிந்தாமணியில் அதிகபட்சமாக 140 மி.மீட்டரும். மொலகல்மூருவில் 80 மி.மீட்டரும், தேவனஹள்ளியில் 70 மி.மீட்டரும், நபோக்லு, ஹரபனஹள்ளி, ஜகலூரில் தலா 60 மி.மீட்டரும், நரகுந்தா, பேலூர், குலேட்குட், திடகுந்தி, சிக்மகளூர், நாகமங்களா, பசரலு, ஹெசரகட்டா, எலஹங்கா, பெங்களூரு நகர மாவட்டம், நெலமங்களாவில் தலா 50 மி.மீட்டர் மழையும் பதிவாகின.

வானிலைமுன்னறிவிப்பு

அடுத்த 72 மணி நேரத்தில் கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர கர்நாடகம், வட, தென் கர்நாடகத்தின் உள்பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த இரண்டு நாள்களில் கர்நாடகத்தின் உள்பகுதிகளில் பலத்தை மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. வருகிற 24-ஆம் தேதி கடலோர கர்நாடகம், மேற்குத் தொடர்ச்சி மலை, தென், வட கர்நாடகத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் கடலோரப் பகுதிகளில் மணிக்கு 45-55 கி.மீட்டர் வேகத்தில் வட மேற்கு நோக்கி பலமான காற்று வீசும் என மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் அடுத்த 48 மணி நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் மட்டும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும். பெங்களூருவில் தட்பவெப்பம் அதிகபட்சம் 30 செல்சியஸ் முதல் குறைந்தபட்சம் 20 டிகிரி செல்சியஸாக இருக்கும். கடந்த 24 மணி நேரத்தில் பெங்களூருவில் 32 மி.மீட்டர் மழை பதிவானது. நிகழாண்டு ஜூன் மாதத்தில் இருந்து இதுவரை 367 மி.மீட்டர் மழை பதிவானது. இது வழக்கத்தைவிட 72 மி.மீட்டர் குறைவு என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பூண்டியில் இருந்து புழலுக்கு வினாடிக்கு 410 கனஅடி நீர் திறப்பு**

ஊத்துக்கோட்டை : பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, வினாடிக்கு, 410 கனஅடி வீதம், சென்னை புழல் நீர்த்தேக்கத்திற்கு, தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.கண்டலேறு அணை யில் இருந்து திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நீர், கடந்த 5ம் தேதி முதல், தமிழகத்திற்கு வருகிறது. துவக்கத்தில் வினாடிக்கு, 300 கனஅடி வீதம் திறந்து விடப்பட்ட கிருஷ்ணா நீர், தற்போது வினாடிக்கு, 1,000 கனஅடி வீதம் திறந்து விடப்பட்டது. ராப்பூர், வெங்கடகிரி, காளஹஸ்தி, வரதயபாளையம், சத்தியவேடு வழியாக, 152 கி.மீ., துாரம் கடந்த, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை, 'ஜீரோ பாயின்'டிற்கு, வினாடிக்கு, 501.19 கனஅடி வீதம் கிருஷ்ணா நீர் வருகிறது.பூண்டி நீர்த்தேக்கத்தில், நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 465 கனஅடி வீதம் கிருஷ்ணா நீர் செல்கிறது. தற்போது நீர்த்தேக்கத்தில், 511 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. நீர்மட்டம், 22.46 அடி. இங்குள்ள இணைப்பு மற்றும் பேபி கால்வாய் மூலம் வினாடிக்கு, 410 கனஅடி வீதம், சென்னை புழல் நீர்த்தேக்கத்திற்கு செல்கிறது.

**விவசாயிகளுக்கான மரக்கன்றுகள் தயார்**

தம்மம்பட்டி: தமிழக காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், வனத்துறை மூலம், தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், விவசாய நிலங்களில் வயல்வெளி மற்றும் வரப்புகளில், மரக்கன்றுகளை நடவு செய்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். மரக்கன்றுகளை, விவசாய நிலங்களில், வனத்துறையினர் மூலம் நடவு செய்யப்பட உள்ளது. மூன்று ஆண்டுகள் உயிருடன் பராமரித்து வளர்க்கும் விவசாயிகளுக்கு, மானியத்தொகை வழங்கப்படுகிறது. அதன்படி, தம்மம்பட்டி வனச்சரகத்துக்கு உட்பட்ட பச்சமலை கிராமத்தைச் தேர்வு செய்து, விவசாயிகளுக்கு சில்வர் ஓக் மற்றும் தேக்கு மரக்கன்றுகள் வழங்க உள்ளனர். அதற்காக வனச்சரக

அலுவலகத்தில், 20 ஆயிரம் சில்வர் ஓக் மற்றும் தேக்கு மரக்கன்றுகள், நாற்றங்கால் அமைத்து வளர்த்து வருகின்றனர். மழை பெய்துள்ளதால், நடவுக்கு தயாராக உள்ள மரச்செடிகளை வனத்துறை அலுவலர்கள், விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## நவீன ரக பழக்கன்று விற்பனை

நாமக்கல்; "நவீன ரக பழக்கன்று, அலங்காரச் செடிகள், காய்கறிச்செடி விதைகள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் விற்கப்படுகிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், நவீன ரக பழக்கன்று, அலங்காரச் செடிகள், காய்கறிச்செடி விதைகள் விற்கப்படுகிறது. அதில், மாம்பழ ரகத்தில், பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், சேலம் பெங்களூரா, நீலம், அத்தி ரகத்தில் திம்லா, சாத்துக்குடி, ஆரஞ்ச், எழுமிச்சை, மாதுளை பழக்கன்றுகள் கிடைக்கும். அலங்காரச் செடிகளில், அரளி, பொன்னரளி, இட்லி பூ, வீரிய ஒட்டு ரக காய்கறி நாற்றுகளான தக்காளி, கத்திரி, மிளகாய், காய்கறி விதைகளில், பாகல், புடல், சுரை, செடி அவரை, கொடி அவரை, கொத்தவரை, பீர்க்கன், வெண்டை, முள்ளங்கி, பரங்கி, பூசணி, கீரை விதைகள் ஆகியவை, விற்பனைக்கு உள்ளது. எனவே, விருப்பமுள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், உரிய கட்டணம் செலுத்தி, விதைகள் மற்றும் செடிகளை பெற்று, பயனடையலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவனப்பயிர் விதை விற்பனை

நாமக்கல்: "தீவனப்பயிர் விதைகள், நாமக்கல் வேளாண் விற்பனை நிலையத்தில் விற்கப்படுகிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், தீவனச்சோளம் (கோ-29), வேலிமசால், சூபாபுல், கொழுக்கட்டைபுல், முயல்மசால், தீவனத் தட்டப்பயிறு (கோஎஃப்சி-8), தீவன மக்காச்சோளம் (ஆஃப்பிரிக்கன் நெட்டை), கொள்ளு மற்றும் அகத்தி விதைகள் கிடைக்கும். எனவே, தீவனப்பயிர் விதைகள் தேவைப்படும் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள், வேளாண் அறிவியல் நிலையத்தில், உரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். நாமக்கல் மாவட்டத்தில், மழை பரவலாக பெய்து வருவதால், தீவனப்பயிர் விதையை வாங்கி பயனடைய

வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூங்கில் கூடை உற்பத்தி அதிகரிப்பால் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில தினங்களாக பெய்த கோடை மழையால், விவசாய பணிகள் துவங்கியதால், மூங்கில் கூடை உற்பத்தி அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மேலும், விவசாயத்தை சார்ந்த மாவட்டத்தில் பல்வேறு தொழில்கள் நடந்து வருகிறது. மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக போதிய பருவமழை இல்லாததால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், விவசாயத்தை சார்ந்த தொழிலான மூங்கில் கூடை உற்பத்தி தொழிலும் பாதிக்கப்பட்டதால், இத்தொழிலில் ஈடுபட்ட பல தொழிலாளர்கள், மாற்றுத் தொழிலுக்கு சென்றனர். இந்நிலையில், மாவட்டத்தில், சில தினங்களாக பெய்த கோடை மழையின் காரணமாக விவசாயிகள், பயிர் சாகுபடிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதையடுத்து, விவசாய பணிகளுக்கான, மூங்கில் கூடைகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், மூங்கில் கூடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து, ஏமாக்குட்டியூரை சேர்ந்த மூங்கில் கூடை உற்பத்தியாளர் துரை கூறியதாவது:

ஏமாக்குட்டியூரில், கடந்த சில ஆண்டுகளுக்கு முன், 40க்கும் மேற்பட்டோர் மூங்கில் கூடை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், மாவட்டத்தில் விவசாய தொழில் பாதிக்கப்பட்டதால், தற்போது, 15 பேர் மட்டும் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாய தொழிலுக்கு, பிளாஸ்டிக், இரும்பு கூடைகள் வந்தாலும், விவசாயிகள் மத்தியில், தொடர்ந்து, மூங்கில் கூடைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனால், எங்கள் பகுதியை சேர்ந்த விவசாயிகள், மொத்தமாக, கர்நாடகா மாநிலம் பெல்காமில் இருந்து மூங்கில்களை வாங்கி வருகிறோம். இங்கு, எங்களுக்குள் மூங்கில்களை பிரித்து கொண்டு, கூடைகளை உற்பத்தி செய்து, தர்மபுரி, நல்லம்பள்ளி வார சந்தைகளில் விற்பனை செய்து வருகிறோம். ஒரு மூங்கில் கூடை அளவுக்கு தகுந்தவாறு, 60 ரூபாய் முதல், 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு, அதிகபட்சமாக ஒரு நபர், ஐந்து கூடைகள் பின்ன முடிகிறது. குறைந்த வருவாய் கிடைத்தாலும், சொந்த தொழிலாக உள்ளதால்,

மகிழ்ச்சியுடன், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோம், என்றார்.

**<u>வேளாண் கருவிகள் செயல் விளக்க முகாம்</u>**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் செயல்விளக்க முகாம் நடத்தப்படுகிறது. இதுகுறித்து, வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில், (2014-15) வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளின் பயன்பாட்டினை பிரபலப்படுத்தும் நோக்கத்தோடு, வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளின் செயல் விளக்க முகாம், வேளாண்மை பொறியியல் துறை மூலம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி, 25ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் கூலியம், செம்படமுத்தூர் ஆகிய கிராமங்களில் விசை களையெடுக்கும் கருவி, 26ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் கொண்டேப்பள்ளியில் லேசர் நில சமன் செய்யும் கருவி, 27ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் ராமிகானப்பள்ளியில், விதை விதைக்கும் கருவி, ஓசூர் வட்டம் தொரப்பள்ளியில், விசை களையெடுக்கும் கருவி, லேசர் நில சமன் செய்யும் கருவி, நல்லகானகொத்தப்பள்ளியில் குழி தோண்டும் கருவி, 28ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் மாரம்பட்டியில் மரம் கவாத்து செய்யும் கருவி ஆகியவற்றை கொண்டு செயல்விளக்கம் செய்யப்படுகிறது. இதில், விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு, அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் செயல்விளக்க முகாம் நடத்தப்படுகிறது. இதுகுறித்து, வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில், (2014-15) வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளின் பயன்பாட்டினை பிரபலப்படுத்தும் நோக்கத்தோடு, வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளின் செயல் விளக்க முகாம், வேளாண்மை பொறியியல் துறை மூலம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி, 25ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் கூலியம், செம்படமுத்தூர் ஆகிய கிராமங்களில் விசை களையெடுக்கும் கருவி, 26ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் கொண்டேப்பள்ளியில் லேசர் நில சமன் செய்யும் கருவி, 27ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் ராமிகானப்பள்ளியில், விதை விதைக்கும் கருவி, ஓசூர்

வட்டம் தொரப்பள்ளியில், விசை களையெடுக்கும் கருவி, லேசர் நில சமன் செய்யும் கருவி, நல்லகானகொத்தப்பள்ளியில் குழி தோண்டும் கருவி, 28ம் தேதி, கிருஷ்ணகிரி வட்டம் மாரம்பட்டியில் மரம் கவாத்து செய்யும் கருவி ஆகியவற்றை கொண்டு செயல்விளக்கம் செய்யப்படுகிறது. இதில், விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு, அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**<u>திருச்சியில் 87,250 ஏக்கரில் சம்பா சாகுபடி நாற்றங்கால் விடும் பணி துவக்கம்</u>**

திருச்சி: மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், திருச்சி மாவட்டத்தில், 87,250 ஏக்கரில் சம்பா சாகுபடிக்கு, நாற்றாங்கால் விடும் பணிகளை, விவசாயிகள் முழு வீச்சில் துவக்கியுள்ளனர். திருச்சி மாவட்டத்தில், டெல்டா பகுதிகளான திருவெறும்பூர், மணிகண்டம், அந்தநல்லூர், லால்குடி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், முசிறி மற்றும் தொட்டியம் வட்டாரங்களில், 87,250 ஏக்கரில் சம்பா சாகுபடிக்கு, நாற்றாங்கால் விடும் பணிகளை விவசாயிகள் செய்து வருகின்றனர். கடந்தாண்டு சம்பா சாகுபடி மாவட்டத்தில், 82,500 ஏக்கரில் நடைபெற்றது. நடப்பாண்டு இதுவரை, 200 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 2,800 ஏக்கரில் சாதாரண முறையிலும், நாற்றாங்கால் விடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து, வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது:

மாவட்டத்தில், சம்பா சாகுபடி பணிகள் துரித கதியில் நடந்து வருகிறது. விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், வேளாண் விரிவாக்க மையங்களில், ஆந்திரா பொன்னி, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, கோ-43, அம்பை-19 ஆகிய நெல் ரங் விதைகள், 535 மெட்ரிக் டன்களும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில், 118 டன் நெல் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. முதல் கட்டமாக, 10 ரூபாய் மனியத்தில், 49 டன் நெல் விதை விற்பனை செய்யப்பட்டுள்ளது. நெல் நுண்ணூட்ட உரம், 15 டன்கள் மற்றும் உயிர் உரங்கள், 20 டன்கள் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்திற்கு, தேவையான உரங்கள் யூரியா, 3,878 மெட்ரிக் டன்களும், டி.ஏ.பி., 3,250 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ், 3,864 மெட்ரிக் டன்களும் மற்றும் கூட்டுரம், 4,678 மெட்ரிக் டன்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக் கடைகளில், போதிய

அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது, என்று கூறினர்.

**<u>நெல் விதைகள் இருப்பு: வேளாண் அதிகாரி உறுதி</u>**

கரூர்: கரூர் வட்டா வேளாண் உதவி இயக்குனர் லட்சுமணசாமி கூறியதாவது: கரூர் வட்டாரத்தில், வெண்ணமலை மற்றும் வேலாயுதம்பாளையம் விரிவாக்க மையங்கில் நடப்பு சம்பா பருவத்திற்கேற்ற அதிக மகசூல் தரக்கூடிய ஐ.ஆர்.20, பி.பி.டி.5204 (ஆந்திரா பொன்னி) மற்றும் ஆடுதுறை- 39 போன்ற சான்று பெற்ற நெல் விதைகள், போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நெல்விதைகள், தேசிய வேளாண் வளர்ச்சித்தின் கீழ் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. சம்பா நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் நெல் விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நெல் நுண்ணூட்ட தேவைக்கு கரூர் வட்டார வெண்ணமலை மற்றும் வேலாயுதம்பாளையம் வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**<u>விவசாயிகளுக்கு விளக்கம்</u>**

கூடலூர் : திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் கிராமப்புற தோட்டக்கலை பணி அனுபவத் திட்டத்தில் கூடலூர் பகுதியில் முகாமிட்டு, விவசாயிகளுக்கு விவசாயம் குறித்த செயல்முறை விளக்கம் அளித்து வருகின்றனர்.கூடலூரில் உள்ள விவசாய நிலங்களில் விதை நேர்த்தி குறித்த செயல்முறை விளக்கத்தை, விவசாயிகளுக்கு செய்து காட்டினர். உயிர் உரங்களான பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா போன்றவைகளை பயன்படுத்தி, விதை நேர்த்தி செய்யும் போது விதையின் தரம், முளைப்புத் திறன் மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிப்பதாக விளக்கம் அளித்தனர். விதைநேர்த்தியின் பயன்கள் பற்றியும் எடுத்துக் கூறினர். இதில் மாணவிகள் கலையரசி, வினோதா, ஸ்ரீநிவி, சாவித்திரி, சாந்தகுமாரி, இந்துமதி, திவ்யபாரதி ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

**<u>விலை உயர்ந்த இஞ்சி</u>**

ராஜபாளையம் : மழை காரணமாக வரத்து இல்லாததால், கடந்த 20 நாட்களாக கிலோ இஞ்சி 170 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தமிழகத்தின் மலைபிரதேசங் களில் இருந்து ராஜபாளையம் மார்க்கெட்டிற்கு மலைஇஞ்சி விற்பனைக்கு

கொண்டு வரப்படும். இது காரம் அதிகமாக இருக்கும். கேரளா மற்றும் தமிழக மலைபிரதேசங்களில் மழையால், மலை இஞ்சி வரத்து குறைந்துவிட்டது. இதனால், கடந்த ஒருமாதமாக இஞ்சி விலை உயர்ந்து வருகிறது. தற்போது, ராஜபாளையம் மார்க்கெட்டில், 170 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதற்கு மாற்றாக, காரம் குறைந்த இஞ்சி விற்பனைக்கு உள்ளது. இதன் விலை கிலோ 80 ரூபாயாக உள்ளது. இஞ்சி வியாபாரிகள், "ராஜபாளையம் சுற்றுவட்டாரத்தை தவிர, தமிழகத்தின் மற்ற பகுதிகளில் மழை பெய்கிறது. கேரளா உட்பட தமிழகத்தின் பலபகுதிகளில் இஞ்சி வரத்து குறைந்து உள்ளது. விலையும் உயர்ந்து உள்ளது' என்றனர்.

## <u>விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல்</u>

விருதுநகர் : விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி, ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் இரு நாட்கள் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சுப்பையா தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் செண்பகராஜ் மற்றும் பருத்திஆராய்ச்சி நிலைய தலைவர் குணசேகரன் முன்னிலை வகித்தனர். பயிர்வாரியாக உயர்விளைச்சல் ரகங்கள், களைக்கொல்லிகள் பயன்படுத்தும்முறைகள், பயிர்களைத்தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், அவற்றை கட்டுப்படுத்தும்முறைகள் குறித்த விவசாயிகளின் கேள்விக்கு, பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியை சாந்தி, உதவிப்பேராசிரியர்கள் பதில் அளித்தனர். பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த அனைவரும் விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். வேப்பம் புண்ணாக்கு மற்றும் வேப்ப எண்ணெய் பயன்படுத்தி தேவைக்கேற்ப பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி தேவைக்கேற்ப பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பயனடைய வேண்டும் என ,விஞ்ஞானிகள் வலியுறுத்தினர். மாவட்ட வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியில், 5 வட்டாரங்களைச் சேர்ந்த 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>புத்தன் அணை பகுதியில் பலத்த மழை</u>

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை கண்ணாமூச்சி காட்டி வரும் நிலையில் அணை பகுதிகளில் நேற்று முதல் மழை

பெய்து வருகிறது. புத்தன்அணை மற்றும் பெருஞ்சாணி அணை பகுதிகளில் சுமார் இரண்டு மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது. புத்தன் அணை பகுதியில் 67.2 மி.மீ. மழை பதிவானது. பெருஞ்சாணி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. மாவட்டத்தில் பெய்த மழை விபரம் மில்லி மீட்டரில்: பேச்சிப்பாறை 7, பெருஞ்சாணி 66.8, சிற்றாறு9.2, கன்னிமார் 1.5, பாலமோர் 6.7, புத்தன் அணை 67.2, திற்பரப்பு 44.4.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று மதுரை வருகிறார் முல்லைப்பெரியாறு பாசன விவசாயிகள் நன்றி தெரிவிக்கும் விழாவில் பங்கேற்கிறார்**

மதுரை, முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (வெள்ளிகிழமை) மதுரை வருகிறார். முல்லைப்பெரியாறு பாசன விவசாயிகள் நன்றி தெரிவிக்கும் பிரமாண்ட விழாவில் கலந்துகொண்டு பேசுகிறார்.

**நன்றி தெரிவிக்கும் விழா**

மதுரை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல் சிவகங்கை மாவட்ட விவசாயிகளின் ஜீவநாடியாக முல்லைப்பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றம் அளித்துள்ளது.இந்தத் தீர்ப்பைப் பெற்று அதை நடைமுறைப்படுத்திய முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு முல்லைப்பெரியாறு பாசன விவசாயிகள் நன்றி தெரிவிக்கும் விழா மதுரையில் இன்று (வெள்ளிக்கிழமை) நடத்தப்படுகிறது. இதற்காக, மதுரை உள்வட்டச் சாலை (ரிங்ரோடு) பாண்டிகோவில் அருகில் பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. 7 லட்சம் பேர் உட்காரும் வகையில் பந்தலில் இருக்கைகள் போடப்பட்டுள்ளன. கோட்டை வடிவிலான முகப்பு அமைக்கப்பட்டு, பெரியாறு அணை போன்று மாதிரி வடிவமும் மிகப்பெரியஅளவில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இரவை பகலாக்கிடும் வகையில் விளக்குகள் போடப்பட்டுள்ளன. விழா நடைபெறும் இடம் அருகில் ஹெலிகாப்ட்ர் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

**தனி விமானத்தில் வருகை**

விழாவில் கலந்துகொள்வதற்காக முதல்–அமைச்சர் ஜெயலலிதா தனிவிமானம் மூலம் இன்று பிற்பகல் மதுரை வருகிறார். விமானநிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் தளத்துக்கு ஹெலிகாப்டரில் வருகிறார். விமானநிலையத்திலும், ஹெலிகாப்டர் தளத்திலும் ஜெயலலிதாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. வரவேற்பு முடிந்ததும், ஹெலிகாப்டர் தளத்தில் இருந்து காரில் விழா மேடைக்கு வருகிறார். விழா மாலை 4.30 மணியளவில் தொடங்குகிறது. விழாவுக்கு கம்பம் பள்ளத்தாக்கு நீரினை பயன்படுத்துவோர் சங்க நிர்வாக உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்குகிறார். வைகை பாசன விவசாயிகள் சங்க ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் மதுரைவீரன், தமிழக விவசாயிகள் சங்க மதுரை மாவட்ட செயலாளர் பனையூர் அழகுசேர்வை, அகில இந்திய பார்வர்டுபிளாக் தமிழ் மாநிலச் செயலாளர் பி.வி.கதிரவன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். பெரியாறு பாசன விவசாயிகள் சங்க பகிர்மானக்குழு தலைவர் அருள்பிரகாசம் வரவேற்றுப் பேசுகிறார். அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விசுவநாதன், செல்லூர் ராஜூ, உதயகுமார், சுந்தரராஜ், கோகுலஇந்திரா ஆகியோர் பேசுகிறார்கள். முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஏற்புரை நிகழ்த்துகிறார்.

முடிவில் வைகை–கிருதுமால்நதி பாசனப்பகுதி விவசாயிகள் சங்கத்தலைவர் ஆலாத்தூர் கோவிந்தன் நன்றி கூறுகிறார். விழா முடிந்ததும் ஜெயலலிதா தனிவிமானத்தில் சென்னை திரும்புகிறார்.

**விழாக்கோலம்**

ஜெயலலிதா வருகையையொட்டி, மதுரை நகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. நகரம் முழுவதும் ஜெயலலிதாவை வரவேற்று பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. விழாத்திடலிலும், நகரின் 4 முக்கிய இடங்களிலும் ஜெயலலிதா உருவம் பொறித்த ராட்சத பலூன்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.

## ஆழியாறு அணை நீர்மட்டம் 115 அடியை எட்டியது கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

ஆழியாறு அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியதையடுத்து நேற்று கரையோர மக்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆழியாறு அணை

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் முக்கிய அணையாக ஆழியாறு அணை

விளங்கி வருகிறது. பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு உள்பட பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரமாகவும், விவசாய தேவைக்கும் உதவிகரமாக ஆழியாறு அணை உள்ளது. இந்த அணைக்கு குரங்கு நீர்வீழ்ச்சி மற்றும் அப்பர் ஆழியாறு உள்பட நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து தண்ணீர் வருகிறது. பொள்ளாச்சி, வால்பாறை மலைப்பகுதியில் பெய்த தொடர் மழையின் காரணமாக ஆழியாறு அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வந்தது. 120 அடி உயரம் கொண்ட ஆழியாறு அணையின் நீர்மட்டம் கடந்த மாதம் 15–ந்தேதி 68 அடியாக இருந்தது. தொடர்ந்து பெய்த மழையினால் கடந்த 5–ந்தேதி 100 அடியை தாண்டியது.

115 அடியை எட்டியது

இந்த நிலையில் மழை குறைந்த போதிலும், அப்பர் ஆழியாறில் இருந்து ஆழியாறு அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வந்தது. இதனிடையே நேற்று மதியம் ஆழியாறு அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியது. இதனால் அணை கடல் போல் காட்சி அளிக்கிறது. அணைக்கு நேற்று மதியம் நிலவரப்படி வினாடிக்கு 700 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், குடிநீருக்கும் வினாடிக்கு 185 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.ஆழியாறு அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியதை தொடர்ந்து, கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையினர் இது குறித்து வருவாய்துறையினர், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்துக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் மூலம் முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிரம்பி விடும்

இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறும் போது, ஆழியாறு அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியதால், ஆழியாற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள், தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் ஆகியோரது பாதுகாப்பு கருதி வருவாய்த்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மூலம் முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தால் இன்னும் ஒருசில தினங்களில் அணை

நிரம்பிவிடும் என்று தெரிவித்தனர்.

**<u>குளச்சல் துறைமுகத்தில் தமிழக மீன்வளத்துறை ஆணையர் ஆய்வு</u>**

குளச்சல் மீன்பிடித்துறைமுகத்தில் தமிழக மீன்வளத்துறை ஆணையர் ஆய்வு செய்தார். குளச்சல் துறைமுகம்

குளச்சல் மீன்பிடித்துறைமுகத்தில் வளர்ச்சிப்பணிகள் நடைபெற்று வருகிறது. அலைத்தடுப்பு சுவர் கட்டும்பணி, கடல் அரிப்பை தடுக்க கோர்லாக் கட்டைகள் அடுக்கும்பணி, பெரிய பாறாங்கற்கள் கொட்டும்பணி, படகுகளை நிறுத்த படகு தளம் அமைக்க கடலை ஆழப்படுத்தும் பணி உள்பட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த செவ்வாய்க்கிழமை மீன்பிடித்துறைமுக பணிகளை மத்திய மீன்பிடித்துறைமுக இணை ஆணையர் சங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்தநிலையில் நேற்று காலை தமிழக மீன்வளத்துறை ஆணையர் பியூலா ராஜேஷ், குளச்சல் துறைமுகத்துக்கு வந்து அங்கு நடைபெற்றுவரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவர் 1 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று ஒவ்வொரு பணிகளாக ஆய்வு செய்தார்.

அவருடன் மீன்பிடித்துறைமுக செயற்பொறியாளர் மலையரசன், உதவி பொறியாளர்கள் அருள் போஸ்கோ, பிரகாஷ், மீன்வளத்துறை உதவி இயக்குனர் ரூபர்ட் ஜோதி, குளச்சல் காணிக்கை மாதா ஆலய பங்குத்தந்தை ஜோசப் ஜஸ்டஸ், ஊர் செயலாளர் தர்மராஜ், விசைப்படகு சங்க தலைவர் பர்ணபாஸ், செயலாளர் பிராங்ளின், துணைத்தலைவர் வின்சென்ட், துணை செயலாளர் வில்பிரட் ஆகியோர் வந்தனர். முன்னதாக அவருக்கு குமரி மாவட்ட விசைப்படகு சங்கத்தினர், வியாபாரிகள் மற்றும் ஏலக்காரர்கள் சங்கத்தினர், காணிக்கை மாதா ஆலய நிர்வாகிகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

**<u>விவசாயிகளுக்கு பண்ணை பயிற்சி முகாம்</u>**

நொய்யல் அருகே உள்ள நடையனூரில் கரூர் மாவட்ட அட்மா திட்டம் மற்றும் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் விவசாயிகளுக்கான பண்ணை பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமில் கறவை மாடுகளில் தீவன பராமரிப்பில் உள்ள தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சி முகாம் நடைபெற்றது. தொடர்ந்து பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் பண்டுதல்காரன் புதூரில் உள்ள கால்நடை பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் அகிலா வரவேற்றார். உதவி பேராசிரியர் பாரதி முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் வீரமணி தலைமை

வகித்தார். சிறப்பு விருந்தினராக வேளாண்மை துறை உதவி இயக்குனர் லட்சுமணசுவாமி கலந்து பயிற்சி பெற்ற 25 விவசாயிகளுக்கு சான்றி தழையும் இடுபொருட் களான தாது உப்புகள், கிருமி நாசினி ஆகியவைகளை வழங்கினார். முடிவில் விவசாயி சேதுபதி நன்றி கூறினார்.

**<u>புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்லணை கால்வாய் மேம்பாட்டு பணிகள் கலெக்டர் ஆய்வு</u>**

புதுக்கோட்டை, மாவட்டத்தில் நடைபெற்று வரும் கல்லணை கால்வாய் மேம்பாட்டு பணிகளை கலெக்டர் மனோகரன் ஆய்வு செய்தார். மேம்பாட்டு பணிகள் ஆய்வு புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மண மேல்குடி, ஊராட்சி வழியாக கல்லணை கல்வாய் செல்கிறது. இதில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மேற்பனைக்காடு நீர்தேக்கம், பட்டத்துரணி, வல்லாரி வாய்க்கால், அம்மாசத்திரம், பெருமகளூர் அனவயல் வாய்க்கால், மண மேல்குடி ஊராட்சி ஒன்றிய மும்பாலை வரை உள்ள கல்லணை கால்வாய் பாசன வாய்க்கால்களை கலெக்டர் மனோகரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:– புதுக்கோட்டை, மாவட்டத் தில் சம்பா சாகுபடிக்கு கல்லணை கால்வாயிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கல்லணை கால்வாய் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மேற்பனைக் காட் டில் தொடங்கி மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம் மும்பாலை வரை சுமார் 39 கிலோ மீட்டர் தூரத்திற்கு செல்கிறது. தற்பொழுது இப்பாசன வாய்க்கால்களில் தண்ணீர் வந்து கொண்டிருக் கிறது. 150 ஏரிகள் மூலம் சுமார் 28 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

அதிகாரிகளுக்குஉத்தரவு

இப்பாசன வாய்க்காலை தூர்வாரி பராமரிக்கும் வகை யில் ரூ.1 கோடியே 9 லட்சம் நிதி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் பாசன வாய்க் காலிருந்து ஏரிகளுக்கு நீர் செல்லும் வாய்க்கால்கள் தூர் வாரப் பட்டு, பாசன வாய்க்கால் மற்றும் ஏரிகளில் மொத்தம் 26 முக்கிய மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப் பட் டுள்ளது. கல்லணை கால்வா யில் மேற் கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் சம்பா சாகுபடிக் காக வரப்பெறும் நீரின் அளவு குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாறு அவர் பேசினார். பின்னர் பாசன வாய்க்கால்களில் உள்ள செடி, கொடி கள், முட்புதர்கள் மற்றும் தேவை

யற்ற கழிவுகளை அப்புறப் படுத்தி சீரமைக்கவும், நீர் கசிவை தடுக்கவும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார். மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம் கோடியக் கரை சுற்றுலாத் தலத்தில் சுற்றுலாத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி யின் கீழ் ரூ.95 லட்சத்து 45 ஆயிரம் மதிப்பீட்டில் மேற் கொள்ளப்பட்டு வரும் பணி களை கலெக்டர் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் சாந்தி, வேளாண் உதவி இயக் குநர் பொன்னையா, உதவி செயற்பொறியாளர் (கல்லணைக் கால்வாய் கோட்டம்) அன்பரசன், உதவி பொறியாளர்(நாகுடி) தென்ன வன், இளம் பொறியாளர் (ஆயிங்குடி) செந்தமிழ்ராஜா, வட்டாட்சியர்கள் கதிரேசன், ஜெயசித்ரகலா, வட்டார வளர்ச்சி அலுவலர் பாஷ்யம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர். மணமேல்குடி

கல்லணையில் இருந்து பாசனத்திற்காக திறக்கப் பட்ட காவிரிநீர் கடந்த 17–ந் தேதி கடைமடைப் பகுதி யான நாகுடிக்கு வந்தது. தொடர்ந்து வாய்க் கால்கள் வழியாக அறந்தாங்கி, மணமேல்குடி, ஆவுடையார் கோவில் ஒன்றியங்களில் உள்ள கடைமடைப் பகுதிகளுக்கு காவிரிநீர் சென்றது. மணமேல்குடி ஒன்றியத்தின் கடை மடைப் பகுதியான மும்பாலை பகுதிக்கு தண்ணீர் வந்ததையொட்டி, பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரஅமைப்பு கல்லணைக் கால்வாய் கோட்ட செயற்பொறியாளர் ரேவதி மும்பாலை பகுதிக்கு சென்று ஆய்வு செய்தார். மேலும் அப் பகுதியில் உள்ள ஏரிகளுக்கு காவிரிநீரை பகிர்ந்து வழங்குவது குறித்தும் ஆய்வு செய்தார். ஆய்வின்போது உதவி செயற் பொறியாளர் அன்பரசன், உதவிப் பொறி யாளர்கள் தென்னரசு, செந்தமிழ்ராஜா ஆகியோர் உடனிருந்தனர். ஆய்விற்கு வந்த அதிகாரிகளை இடையாத்திமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பாண்டியராமன் மற்றும் அப்பகுதி விவசாயிகள் வரவேற்று, கடைமடைப் பகுதிகளுக்கு தொடர்ந்து முறையாக தண்ணீர் வழங்கவேண்டும் என கேட்டு கொண்டனர்.

**<u>பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை பயிர் காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் வழங்க வேண்டும் குறைதீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை</u>**

தூத்துக்குடி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை பயிர் காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் வழங்க வேண்டும், என தூத்துக்குடியில் நேற்று நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைதீர்க்கும்கூட்டம்

தூத்துகுடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கினார். வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தட்சணா மூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செந்தில்வேல் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:– விவசாயிகள்:– வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என கடந்த 2 ஆண்டுகளாக போராடி வருகிறோம். கடந்த ஆண்டு மழை இல்லாததால், பயிர்கள் கருகின. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம். இதுவரை நஷ்டஈடு வழங்கவில்லை. இதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலவேறுதிட்டங்கள்

வேளாண்மைத்துறை இணை இயக்குனர்:– தேசிய வேளாண்மை பயிர் பாதுகாப்பு திட்டத்தில் உணவு பாதுகாப்பு, சொட்டு நீர் பாசனம் உள்பட பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அதற்கு மானியமும் வழங்கப்படுகின்றன. குறைந்த அளவு நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. நெல், சிறுதானிய பயிர்களை அதிக அளவு உற்பத்தி செய்ய வேண்டும். அரசு அறிவிக்கும் திட்டங்களை பயன்படுத்தி மானியம் பெற வேண்டும். மேலும் தமிழக சட்டசபையில் முதல்–அமைச்சர் 110–வது விதியின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணைகுட்டை திட்டத்தை அறிவித்து இருக்கிறார். இந்த திட்டம் தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, புதூர், ஓட்டப்பிடாரம், கயத்தாறு, உடன்குடி ஆகிய 5 இடங்களில் விரிவுபடுத்தப்படுகிறது. இந்த வாய்ப்பையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயிர்காப்பீடு விவசாயிகள் அரசின் திட்டத்தை விளம்பரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அதிகாரிகள் பேசுகிறார்கள். விவசாயிகளுக்கு என்ன பிரச்சினை என்று கேட்க மறுக்கிறார்கள். நாங்கள் வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தை நிறைவேற்றி பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா? என்று தான் கேட்டோம். கலெக்டர்:– இந்த திட்டம் பற்றி மாநில அரசு கணக்கெடுத் துள்ளது. மாநில அரசு நிதி ஒதுக்கி உள்ளது. ஆனால் மத்திய அரசு நிதிக்காக காத்து இருக்கிறோம். இந்த பயிர் காப்பீட்டு திட்டம் மாநிலம் முழுவதும்

அமல்படுத்தப்பட உள்ளது. வறட்சி மாவட்டம் என்பதால், நமது மாவட்டத்துக்கு கணிசமான நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். மத்திய அரசு நிதி ஒதுக்கிய உடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும்.

பயிர்கடன்

விவசாயிகள்:– பெரும்பாலான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பயிர்கடன் வழங்குவது இல்லை? கலெக்டர்:– தூத்துக்குடி மாவட்டத்தில் 250 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் உள்ளன. மேற்கண்ட வங்கிகளில் நகைக்கடன், விவசாய கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே கடன் நிலுவையில் இருந்தால் கடனை நிறுத்தி வைத்து இருப்பார்கள். அப்படியில்லை என்றால், அந்த வங்கிக்கு அதிக கடன் இருக்கும். அதனால் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும். எந்த வங்கி என்று கூறினால், பரிந்துரை செய்ய முடியும்.

**விவசாயிகள் கோழிப்பண்ணை வைக்க மானியத்துடன் கடன் கொடுப்பது இல்லை**

கலெக்டர்:– ஏற்கனவே பல கோழிப்பண்ணைகள் தொடங்க கடன் கொடுக்கப்பட்டு உள்ளது. இதுபோன்ற பண்ணைகள் வைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் ஊக்குவித்து வருகிறது. கேழிப்பண்ணை வைக்க விரும்புபவர்கள் என்னிடம் மனுக்களை கொடுங்கள். நான் பரிந்துரை செய்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம்அணை

விவசாயிகள்:– ஸ்ரீவைகுண்டம் அணை கட்டில் தூர்வார வேண்டும் என 25 ஆண்டு காலமாக விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். வனத்துறைக்கு மரங்கள் வைக்க 100 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பணியை உடனடியாக மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். கலெக்டர்:– இது தொடர்பாக மாநில அரசிடம் பேசிக் கொண்டு இருக்கிறோம். கடந்த ஜூன் மாதம் 2–ந் தேதி மாநில அரசு குழு அணையை ஆய்வு செய்துள்ளது. அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. தற்போது மாநில வனத்துறை நிர்வாகம், மத்திய அரசுக்கு கடிதம் எழுத உள்ளது. மத்திய அரசு அனுமதி கிடைத்துடன் அணை தூர்வாரப்படும். இந்த பிரச்சினையை நாங்கள் உன்னிப்பாக கவனித்து

வருகிறோம்.
புதியதடுப்பணை

விவசாயிகள்:– ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து வழிந்தோடும் உபரி நீரை அதன் அருகே புதிய தடுப்பணை கட்டி தண்ணீரை சேமிக்கலாம். கலெக்டர் இது தொடர்பாக அதிகாரிகளிடம் கலந்து பேசுகிறேன். தண்ணீரை சேமித்து வைக்க முடியும் என்றால், புதிய திட்டம் தயார் செய்ய சொல்வோம். இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது. கூட்டத்தில் பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் ஏ.சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணை இயக்குனர் ஜானகிராமன், கோவில்பட்டி உதவி கலெக்டர் டாக்டர் விஜய் கார்த்திகேயன், அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**முதல்–அமைச்சர் ஜெயலலிதா விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் கலெக்டர் மதிவாணன் பேச்சு**

முதல்–அமைச்சர் ஜெயலலிதா பல்வேறு திட்டங்களை விவசாயிகளுக்கு செயல்படுத்தி வருகிறார் என்று கலெக்டர் மதிவாணன் பேசினார்.
நேரடிநெல்விதைப்பு

நன்னிலம் ஒன்றியம் மூங்கில்குடி கிராமத்தில் நவீன விவசாய கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கி, நேரடி நெல் விதைப்பை தொடங்கி வைத்து பேசினார்.அப்போது அவர் கூறியதாவது:– திருவாரூர் மாவட்டம் 2–ம் பசுமை புரட்சியின் திருப்பு முனையாக அமைய வேண்டும். அதற்காக தான் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் விதை நெல் போன்ற பல்வேறு திட்டங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். இந்த ஆண்டு பருவநிலை நன்றாக உள்ளதால் வாய்ப்புள்ள இடங்களில் விவசாயிகள் நேரடி விதைப்பு செய்யுங்கள் உங்களுக்கு தேவையான அனைத்து உதவி களையும் செய்ய அரசும், மாவட்ட நிர்வாகமும் தயாராக உள்ளது. இவ்வாறு அவர்கூறினார். கலந்து கொண்டவர்கள் நிகழ்ச்சியில் நன்னிலம் ஒன்றியக்குழு தலைவர் எஸ்.சம்பத், எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மை ஆராய்ச்சி கழக விஞ்ஞானி பரசுராமன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய ஆணையர்கள் பொற்செல்வி, சந்தானகிருஷ்ணரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் கார்த்திக், ரம்யாசிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர் திறந்து விடப்பட்டதால் திருச்சி மாவட்டத்தில் 87 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி பணி தீவிரம் 15 ஆயிரத்து 670 டன் உரம் கையிருப்பு

திருச்சி, மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர் திறந்து விடப்பட்டு இருப்பதால் திருச்சி மாவட்டத்தில் 87 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி பணி தீவிரமாக நடந்து வருகிறது. சம்பா பயிருக்கு தேவையான 15 ஆயிரத்து 670 டன் உரம் கையிருப்பில் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து கடந்த 10–ந்தேதி காவிரி நீர் திறந்து விடப்பட்டது. இதனை தொடர்ந்து திருச்சி மாவட்டத்தில் காவிரி பாசன பகுதிகளான திருவெறும்பூர், மணிகண்டம், அந்த நல்லூர், லால்குடி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் பகுதிகளில் சம்பா சாகுபடிக்காக நாற்றங்கால் விடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. இதுவரை 200 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும் 2,800 ஏக்கரில் சாதாரண முறையிலும் நாற்றங்கால் விடப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு 82 ஆயிரத்து 500 ஏக்கரில் சம்பா பயிர் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 87 ஆயிரத்து 250 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட உள்ளது. அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் ஆந்திரா பொன்னி, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, கோ– 43, அம்பை 19, ஆகிய நெல் ரக விதைகள் 535 மெட்ரிக் டன்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் 118 டன் நெல் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 49 டன் நெல் விதைகள் 10 ரூபாய் மானியத்தில் வினியோகம் செய்யப்பட்டு உள்ளன. நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 3,878 டன்களும், டிஏபி 3,250 டன்னும், பொட்டாஷ் 3,864 டன்னும், மற்றும் கூட்டுரம் 4,678 டன்னும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. இந்த தகவலை திருச்சி மாவட்ட வேளாண் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்

## சுல்தான்பேட்டை ஒன்றிய பகுதியில் பயறு வகைகளின் சாகுபடி குறைவதை தடுக்க நடவடிக்கை

சுல்தான்பேட்டை ஒன்றிய பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையை தொடர்ந்து விவசாய பணிகள் நடந்து வருகிறது. பயறுவகைகள் சாகுபடி குறைந்து வருவதை தடுக்க வேளாண்மை துறை அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து

வருகிறார்கள். இதுதொடர்பாக சுல்தான்பேட்டை ஒன்றிய வேளாண்மை துறை அதிகாரிகள்கூறியதாவது:–

சுல்தான்பேட்டை வட்டார பகுதியில் பயறு வகைகளின் சாகுபடி குறைந்து வருகிறது. இதை தடுப்பதற்கு வேளாண்மை துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக பாசிபயறு விதை 700 கிலோ, தட்டைப்பயறு 360 கிலோ, துவரை 100 கிலோ இருப்பு வைக்கப் பட்டுள்ளன. இவைகளில் பாசி பயறு கிலோ ரூ.100–க்கும், தட்டைப்பயறு கிலோ ரூ.45–க்கும், துவரை கிலோ ரூ.17–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனை விவசாயிகள் வாங்கி பயிர் செய்து, பயறு வகைகளின் சாகுபடியை அதிகரிக்க ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள்கூறினார்கள்.

தினகரன்

**இன்றையவேளாண்செய்திகள்**

**மேட்டூரிலிருந்து நீர் திறப்பு அதிகரிப்பு : அணையின் நீர்மட்டம் வேகமாக குறைகிறது**

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 21,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 6,284 கனஅடியாக குறைந்த நிலையில் அணையிலிருந்து திறக்கப்ப-டும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறையத் துவங்கியுள்ளது. டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து கடந்த 10ம் தேதியன்று காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் கட்டமாக வினாடிக்கு 9,000 கனஅடி அளவிற்கு நீர் திறக்கப்பட்டது. அதன் பிறகு பாசனத்தினுடைய தேவைக்கேற்ப திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். கடைமடை பகுதிக்கு முழுமையாக தண்ணீர் வந்து சேராததால், நீர் திறப்பு அளவை அதிகரிக்குமாறு தொடர்ந்து விவசாயிகள் வலியுறுத்தி வந்த நிலையில், 9,000 கனஅடியிலிருந்து 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை 16,000

கனஅடியிலிருந்து 21,000 கனஅடி வரை நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டமும் வேகமாக சரியத் துவங்கியுள்ளது. இன்று காலை நிலவரப்படி அணைக்கு வரும் நீர்வரத்தானது 6,200 கனஅடியாக உள்ளது. நீர்திறப்பு 21,600 கனஅடியாக இருக்கிறது. காவிரியில் 21,000 கனஅடிக்கும், கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரானது அணையில் இருந்து திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையின் நீர்மட்டம் 111.3 அடியாக உள்ளது. கர்நாடக மாநிலத்தில் மழை நின்றுவிட்டதால் அங்கிருந்து வரக்கூடிய உபரிநீரின் அளவு தொடர்ந்து குறையத் துவங்கியுள்ளது. இன்றும் சில தினங்களில் கர்நாடகாவிலிருந்து வரும் நீர்ன் அளவு குறைந்து பின் நின்றுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**<u>டெல்டா பாசன பகுதிகளுக்கு மேட்டூர் அணையில் இருந்து 16 ஆயிரம் கனஅடி நீர்திறப்பு</u>**

மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசன பகுதிக்கு தண்ணீர் திறப்பு நேற்று முதல் விநாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.மேட்டூர் அணை நீர்மட்டம் 110 அடியை தாண்டியதையடுத்து காவிரி டெல்டா பாசன பகுதிக்கு கடந்த 10ம் தேதி முதல் விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் கடந்த 15ம் தேதி முதல் தண்ணீர் திறப்பு 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை 10 மணி முதல் நீர் திறப்பு 16 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து ஏற்ற, இறக்கமாகவே உள்ளது. நேற்று முன்தினம் விநாடிக்கு 6,539 கனஅடியாக இருந்த வரத்து நேற்று காலை விநாடிக்கு 7,732 கனஅடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 112.30 அடியாக உள்ளது. அணை நீர் இருப்பு 81.72 டிஎம்சியாக இருந்தது. நீர் வரத்து குறைந்த நிலையில் திறப்பு அதிகமாக உள்ளது. தொடர்ச்சியாக 16 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கும் பட்சத்தில் தினமும் 1.25 டிஎம்சி வரை அணை நீர் இருப்பு குறையும் என்று கூறப்படுகிறது.

**வேதாரண்யத்தில்ஆர்ப்பாட்டம்**

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா கரியாபட்டினம், பிராந்தியங்கரை, அண்டகாத்துறை, மூலக்கரை, மகாராஜபுரம், செம்பியன்மணக்குடி, வடமழை, மணக்காடு ஆகிய பகுதிகள் ஆற்று பாசன பகுதிகளாகும். இப்பகுதியில் சுமார்

2,000 ஹெக்டேரில் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது பயிர்கள் முளைவிட்டுள்ளது. ஆனால் தண்ணீர் இல்லாததால் முளைத்த பயிர்கள் கரும் நிலை ஏற்பட்டுள்ளது. காவிரியில் தண்ணீர் திறந்து 10 நாட்களுக்கு மேலாகியும் இன்னும் இப்பகுதிக்கு தண்ணீர் வரவே இல்லை. எனவே உடனடியாக இப்பகுதிக்கு முறை வைக்காமல் தொடர்ந்து 10 நாட்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இந்த கோரிக்கையை வலியுறுத்தி, பிராந்தியங்கரையில் உள்ள தண்ணீர் வராத வாய்க்காலில் விவசாயிகள் இறங்கி தண்ணீர் திறக்ககோரி கோஷம் எழுப்பினர்.

## <u>2ம் மண்டல பாசனத்திற்காக கான்டூர் கால்வாயில் தண்ணீர் திறப்பு</u>

பொள்ளாச்சி, : 2ம் மண்டல பாசன வசதிக்காக திருமூர்த்தி அணைக்கு, கான்டூர் கால்வாய் வழியாக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்காரணமாக சர்க்கார்பதியில் மின் உற்பத்தி துவங்கியுள்ளது. பொள்ளாச்சியை அடுத்த பரம்பிக்குளம் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் தூணக்கடவு சென்று, அங்கு சுரங்கப்பாதை வழியாக சர்க்கார்பதியை வந்தடைகிறது.சர்க்கார்பதியில் மின்உற்பத்தி செய்யப்பட்டு, பின் கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. பிஏபி திட்டத்தில் 49.5 கிலோ மீட்டர் தூரம் உடைய கான்டூர் கால்வாயில் 2011ம் ஆண்டு முதல் கடந்த 2013ம் ஆண்டுவரை வரை மூன்று கட்டங்களாக பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. பின் இந்த ஆண்டில் 4ம் கட்ட பராமரிப்பு பணிக்காக, கடந்த ஏப்ரல் மாதம் கான்டூர் கால்வாயில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இந்நிலையில், வரும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் திருமூர்த்தி அணையிலிருந்து இரண்டாம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கான்டூர் கால்வாய் பராமரிப்பு பணி தற்காலிகமாக நிறுத்தம் செய்து, பரம்பிக்குளம் அணையிலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். தூணக்கடவில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நேரடியாக சர்க்கார்பதி நீர் மின்நிலையத்தில் வந்து சேர்கிறது. அங்கு மின் உற்பத்தி செய்யப்பட்டு, பின் கான்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திருமூர்த்தி அணையை நோக்கி சென்றது. தற்போது கான்டூர் கால்வாயில் வினாடிக்கு 800

கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 12 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. 4 மாதங்களுக்கு பிறகு சர்க்கார்பதியில் மின்உற்பத்தி துவங்கியுள்ளது. தொடர்ந்து டிசம்பர் மாதம் வரை சர்க்கார்பதியில் மின் உற்பத்தி நடக்கும் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், கான்டூர் கால்வாய் சீரமைப்பு பணியால் சுமார் 4 மாதங்களாக சர்க்கார்பதியில் மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது. தற்போது கான்டூர் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், மின் உற்பத்தியும் துவங்கியுள்ளது. கால்வாயில் செல்லும் தண்ணீரின் அளவு அதிகரிக்கும் போது மின்உற்பத்தியும் அதிகரிக்கும். அதிகபட்சமாக 22 மெகாவாட்வரை மின்உற்பத்தி செய்யலாம் என்றனர்.

<u>மழை நீடிப்பதால் முழு கொள்ளளவில் சோலையார் அணை</u>

வால்பாறை, : வால்பாறையின் சுற்றுவட்டார பகுதிகளிலும் சாரல் மழை நீடிப்பதால் நீர் வரத்து தொடர்ந்து சோலையார் அணை முழு கொள்ளள விலேயே உள்ளது. இதன் காரணமாக சோலையார் மின்நிலையத்தில் மின் உற்பத்தி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.வால்பாறையின் சுற்றுவட்டார பகுதிகளிலும் கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த சில வாரங்களாக மழை பலமாகவும், பரவலாகவும் பெய்ததில் பிஏபி திட்ட அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. இதில் சோலையார் அணை கடந்த 1ம் தேதி முழு கொள்ளளவையும் எட்டியது. தொடர்ந்து சாரல் மழை பெய்து வரும் நிலையில் நீர்வரத்து குறையாததால், தொடர்ந்து 20 நாட்களாக அணையின் நீர்மட்டம் குறையவில்லை. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து ஆயிரத்து 595 கன அடியாக உள்ளது. 160 அடி கொண்ட அணை முழு கொள்ளளவில் இருப்பதால், அணையில் இருந்து சோலையார் மின்நிலையம் 1 இயக்க 401 கன அடி நீரும், மின்நிலையம் 2 இயக்க 621 கன அடி நீரும் வெளியேற்றப்படுகிறது. மேலும் அணையில் இருந்து சேடல் அணை பகுதியில் 687 கன அடி நீர் வழிந்து பரம்பிக்குளம் அணைக்கு செல்கிறது. தற்போது சோலையார் அணையில் 5 ஆயிரத்து 441 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.மழை தொடர்வதால் மின்நிலையங்களில் மின் உற்பத்தி பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. சோலையார் மின்நிலையம் வழியாக வெளியேறும் நீர் பரம்பிக்குளம்

அணைக்கு செல்கிறது. பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு ஆயிரத்து 459 கன அடியாக உள்ளது. 72 அடி கொண்ட அணை யின் நீர்மட்டம் 61.5 அடியாக உள்ளது. அணையில் இருந்து 956 கன அடி நீர் கான்டூர் கால்வாயில் வெளியேற்றப்படுகிறது.

**<u>கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனை</u>**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று(21ம் தேதி) நடந்த மஞ்சள் ஏலத்தில் 11 விவசாயிகள் கொண்டு வந்த 190 குவின்டால் மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள் மற்றும் வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று (21ம் தேதி) நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் 135 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 55 குவின்டாலும் விற்பனைக்கு வந்தது. இதை நல்லூர் வயல், பரமேஸ்வரம்பாளையம், ஆலாந்துறை, தொண்டாமுத்தூர், பூலுவபட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த 11 விவசாயிகள் கொண்டு வந்தனர். இதில் விரலி மஞ்சள் 135 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 55 குவின்டாலும் என மொத்தம் 190 குவின்டால் விற்பனையானது. இதில் விரலி மஞ்சள் ரூ.5,651 முதல் ரூ.6,404க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.5,551 முதல் ரூ.6,066க்கும் விற்பனையானது. கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த 6 வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விரலி மஞ்சள் குவின்டால் சராசரியாக ரூ.6 ஆயிரத்திற்கும், கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.5,800க்கும் விற்பனையாகியுள்ளது. விரலி மஞ்சள் விற்பனை மதிப்பு ரூ.8.10 லட்சம். கிழங்கு மஞ்சள் விற்பனை மதிப்பு ரூ.3.19 லட்சம். மொத்த மதிப்பு ரூ.11.29 லட்சமாகும்.முந்தைய ஏலத்தோடு ஒப்பிடுகையில், விரலி மஞ்சள் வரத்து 9 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் வரத்து 3 குவின்டாலும் குறைந்துள்ளது. விற்பனை விரலி மஞ்சள் 60 குவின்டாலும் கிழங்கு மஞ்சள் 18 குவின்டாலும் அதிகரித்துள்ளது. மொத்தத்தில் 78 குவின்டால் அதிகரித்துள்ளது. விரலி மஞ்சள் குறைந்தபட்ச விலை ரூ.400 வரையும், அதிகபட்ச விலை ரூ.50 வரையும் அதிகரித்துள்ளது. கிழங்கு மஞ்சளின் குறைந்தபட்ச விலை கடந்த வாரத்தை போல் நிலவுகிறது. அதிகபட்ச விலை ரூ.150 வரை குறைந்துள்ளது. மொத்தத்தில் விற்பனை ரூ.4.64 லட்சம் அதிகரித்துள்ளது.இது குறித்து கோவை

ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சண்முகம் கூறுகையில், 'நேற்று(21ம் தேதி) நடந்த ஏலத்தில் விற்பனைக்கு மஞ்சள் கொண்டு வந்த விவசாயிகள் 6 பேர் ஒரு குவின்டால் முதல் 8 குவின்டால் வரை 6 பேரும், 12 குவின்டால் முதல் 32 குவின்டால் வரை 5 பேரும் கொண்டு வந்தனர். விற்பனைக்கு கொண்டு வந்த அனைத்து மஞ்சளையும் விற்பனை செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் குறு விவசாயிகள். இதனால் இந்த வாரம் விற்பனை 100 சதவீதம் நடந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.' என்றார்.

**மொரப்பூர் பகுதியில் உழவு பணிகள் மும்முரம்**

அரூர், : மொரப்பூர் பகுதியில் விவசாயிகள் உழவுப்பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தர்மபுரி மாவட்டம், மொரப்பூர், அரூர் பகுதியில் போதியஅளவு மழை இல்லை தென்னை, மா உள் ளிட்ட மரங்கள் முற்றிலும் காய்ந்துவிட்டன. நிலத்தடி நீர் மட்டமும் குறைந்துவிட்டது. இதனால், விவசாயிகள் கால்நடைகளுக்கு தீவனமின்றி வேறு மாவட்டம், மாநிலங் களிலிருந்து வைக்கோலை விலைக்கு வாங்கி பயன்படுத்தி வந்த னர். இந்நிலையில், தற்பேது ஓரளவு மழை பெய்துள்ளதால், விவசாயிகள் உழ வுப் பணிகளில் மும்முரமக ஈடுபட்டுள்ளனர். ஏற் கனவே பயிர் செய்துள்ள மஞ்சள், மரவள்ளி கிழங்கு பயிர்கள் தற்போதைய மழையால் நன்றாக உள் ளது. இதே போல் பருத்தி, மக்காசோளம் உள்ளிட்ட பயிர்கள் தற்போது நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வப்போது மழை பெய்து வருவதால் விவசாயிகள் உழவுப்பணி யில் தீவிரம் காட்டி வருகின்றனர். இது குறித்து வேளா ண் மை அதிகாரி கூறுகை யில், தற்போது பெய்து வரும் மழைக்கு சோளம், சாமை, தட்டப்பயறு, துவ ரை, பா சி பயறு, உளுந்து, பருத்தி, காய்கறிகள் உள்ளிட்டவை நடவு செய்ய ஏற்ற பருவமா கும். எனவே, விவசாயிகள் தானிய வகைகள், காய்கறிகளை பயிர் செய்து பயன் பெறலாம் என்றார்.

**வரத்து குறைவால் தேங்காய் விலை 3 மடங்கு உயர்வு**

கோபால்பட்டி, : வரத்து குறைந்துள்ளதால் சாணார்பட்டி பகுதியில் தேங்காய் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. சாணார்பட்டி ஒன்றியத்தில் வேம்பார்பட்டி, அஞ்சுகுழிபட்டி, வடகாட்டுபட்டி, சிலுவத்தூர் உள் ளிட்ட பல்வேறு பகுதிக ளில் சுமார் 250க்கு மேற் பட்ட ஏக்கரில் தென்னை சாகுபடி நடைபெறுகிறது. இக்கிராமங்களில் விளையும் தேங்காய்கள் விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை போன்ற விசேஷங்களுக்கு புதுதில்லி மற்றும் மும்பை, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளாகவே பருவமழை சரிவர பெய்யவில்லை. இதனால் தென்னை விவசாயம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. பாதிக்கும் மேற் பட்ட தென்னை மரங்கள் பட்டுபோயிவிட்டன. இந்த ஆண்டு ஆண்டு விநாயகர் சதுர்த்தி போன்ற விசேஷங்கள் நெருங்கும் வேளையில் தேங்காய் வரத்து மூன்றில் ஒரு பங்காக குறைந்துள்ளது. இதனால் தேங்காய் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்த்த அளவு விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து வேம்பார்பட்டியை சேர்ந்த தேங்காய் வியாபாரி சித்திக் கூறுகையில், கடந்த 3 வருடமாக சராசரியாக தேங்காய் வரத்து குறைந்து கொண்டே போகிறது. கடந்த காலங்களில் மட்டும் சாணார்பட்டி பகுதியில் இருந்து வெளிமாநிலங்களுக்கு 10 லோடுகளுக்கு மேல் அனுப்பி வைக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு 4 லோடு அனுப்புவது என்பதே கஷ்டம்தான். வரத்து குறைந்துள்ளதால் விலை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ரூ.3 முதல் ரூ.6 வரை விற்கப்பட்ட தேங்காய் தற்போது ரூ.6 முதல் ரூ.12 வரை (மொத்த விலை) விற்கப்படுகிறது. தென்னை விவசாயம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதால், தென்னை விவசாயத்தை காப்பாற்ற விவசாயிகளுக்கு அரசு தென்னங்கன்றுகளை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கேழ்வரகு எலும்பு தேய்மானத்தை குறைக்கும்

திண்டுக்கல், : ராகி எனப்படும் கேழ்வரகு எலும்பு தேய்மானத்தை குறைப்பதுடன் உடல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்று திண்டுக்கல்லில் வேளாண் துறை சார்பில் நடைபெற்ற சிறுதானிய உணவு திருவிழாவில் விளக்கப்பட்டது.திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில், வட் டார வேளாண் துறை சார் பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானிய உணவு

திருவிழா நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் அரள்அரசு வரவேற்றார். ஊராட்சி ஒன்றிய தலைவர் கமலா தேவி, துணை தலைவர் லோகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.அரிசியை மட்டுமே தொடர்ந்து உண்பதால் உட லுக்கு கிடைக்க வேண் டிய இதர சத்துக்கள் கிடைக்காமல் போய்விடுகின்றன. சிறுதானியங் களை தவிர்த்து துரித உணவுக ளையும் சேர்ப்பதால்தான் பல்வேறு நோய் கள் ஏற்படுகின்றன. எனவே சிறுதானியங்களை அன்றாட உணவில் சேர்த்து கொள்ள வேண்டும்.ரத்த விருத்திக்கு இரும்புச்சத்து உள்ள கம்பையும், அசதியும், தளர்ச்சியும் நீங்க சாமை, வாளிப்பான வலுவான உடலமைப்பிற்கு வரகு, சர்க்கரை நோய்க்கு குதிரைவாலி, நோயற்ற வாழ்விற்கு திணை, எலும்பு தேய்மானத்தை குறைக்கும், வளர்ச்சியை ஊக்குவிக்கும் கேழ்வரகு போன்றவைகளை சுழற்சி முறையில் உண்டால் நோய் நம்மை அண்டாது.கம்பில் புரதம், சுண் ணாம்பு, பாஸ்பரஸ் போன்ற தாதுக்களும், உயிர்சத்துக்களும் உள்ளன. இது செரிமான திறனை அதிகரிக்கும். உடல் வெப்பநிலையை சமநிலையில் வைத்திருக்கும். வேண்டாத கொழுப்புகளை கரைத்து பருமனை குறைக்கும். தாய்மார்களுக்கு பால் உற்பத்தியை பெருக்கும். உடல் வலிமையை அதிகரிக்கும். சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம் சத்துக்கள் அடங்கியுள்ளன. தானியங்களிலேயே அதிக சத்துமிக்கது கேழ் வரகு. இது ராகி என்றும் அழைக்கப்படுகிறது. இதில் புரதம், தாது, உப்பு, சுண் ணாம்பு, இரும்பு மற்றும் உயிர்சத்துக்களும் நிறைந்திருக்கின்றன என்று உணவு திருவிழாவில் தெரிவிக்கப்பட்டது. சிறுதானியங்க ளில் தயார் செய்யப்பட்ட பல்வேறு வகையான உணவு விவசாயிகளுக்கு பரிமாறப்பட்டது.

**திருச்சி மாவட்டத்தில் சம்பா நடவு மும்முரம் 87,250 ஏக்கர் இலக்கு அக்டோபர் 15 வரை தண்ணீர்**

பாசன விவசாயிகள் கூறுகையில், சம்பா சாகுபடிக்கு அக்டோபர் 15ம் தேதி வரை மேட்டூர் தண்ணீரைத் தான் முழுமையாக நம்பி இருக்க வேண்டி யிருப்பதால் தட்டுப்பாடின்றி, முறை வைக்காமல் தண்ணீர் வழங்க வேண்டும். அப்போது தான் சம்பா சாகுபடி முழுமையாக நடைபெறும். மேலும் விவசாயி களுக்கு இடுபொருட்களையும் தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும். திருச்சி மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை நிலையங்களில் விதைகள், உரங்கள்

தட்டுப்பாடின்றி எப்போதும் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.திருச்சி, : மேட்டூர் அணையில் கடந்த 10ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடி நடவு பணிகளில் விவசாயி கள் மும்முரமாக இறங்கியுள்ளனர். நடப் பாண்டு 87,250 ஏக்கர் சாகுபடி இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது.மேட்டூர் அணை வழக்கமாக ஜூன் 12ல் திறக்கப்படுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லா ததால் குறுவை சாகு படிக்கு அணை திறக்கப்பட வில்லை. பின்னர், கர்நாடக அணைகள் நிரம்பியதைத் தொடர்ந்து அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி அணைகளின் உபரிநீர் மேட்டூருக்கு வரத் தொடங்கியதால் மேட்டூர் அணை வேகமாக நிரம்பியது. இதனிடையே, சம்பா பாசனத்துக்கு மேட்டூர் அணை 15ம் தேதி திறக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். ஆனால், அதற்கு முன்னதாகவே மேட்டூர் அணையில் இருந்து கடந்த 10ம் தேதியே தண்ணீர் திறக்கப்பட்டது.இதன் காரணமாக திருச்சி மாவட்ட டெல்டா பகுதிகளான திருவெறும்பூர், மணிகண்டம், அந்த நல்லூர், லால்குடி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், முசிறி மற்றும் தொட்டியம் வட்டாரங்களில் 87,250 ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடிக்கான நடவு மற்றும் நாற்றாங்கால் விடும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.இதில், இதுவரை 200 ஏக்கரில் திருந்திய நெல்சாகுபடி முறையிலும் 2,800 ஏக்கரில் சாதாரண முறையிலும் நாற்றாங்கால் விடப்பட்டுள்ளது. மேலும் டெல்டா பகுதியில் உள்ள வருவாய் கிராமங்களில் சம்பா சாகுபடி முனைப்பு முகாம்கள் இம்மாதம் 31ம் தேதி வரை மேற்கொள்ளப் படுவதுடன் சம்பா சாகுபடிக்குத் தேவையான அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது. மானிய விலைஅனைத்து வேளாண் விரிவாக்க மையங்கிளிலும் ஆந்திர பொன்னி, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, கோ-43,அம்பை-19 ஆகிய நெல் ரக விதைகள் 535மெட்ரிக் டன்களும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் 118 டன்கள் நெல் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 49 டன் அளவிலான நெல் விதைகள் கிலோவுக்கு ரூ.10 மானியம் வீதம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.மேலும் நெல் நுண்ணூட்ட உரம் 15 டன்கள் மற்றும் உயிர் உரங்கள் 20டன்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.கையிருப்பு தாராளம் இதுகுறித்து வேளாண் துறையினர் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் நடப்பா சம்பா பருவத்துக்குத்

தேவையான உரங்கள் கையிருப்பில் தாராளமாக உள்ளன. குறிப்பாக, யூரியா 3,878 மெ.டன்னும், டிஏபி 3250 மெ. டன்னும், பொட்டாஷ் 3,864 மெ.டன்னும் மற்றும் கூட்டுரம் 4,678 மெ.டன்னும் திருச்சி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக் கடைகளில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் 82,500 ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டது. இந்தஆண்டு 87,250 ஏக்கரில் சம்பா சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

**<u>வறட்சியை கட்டுப்படுத்தும் திட்டங்களை கண்டறிந்து மகசூலை அதிகரிக்க வேண்டும் விஞ்ஞானிகளுக்கு அழைப்பு</u>**

சாதனை விவசாயிகளுக்கு விருதுகள் விழாவில், தேனி மாவட்டம், காமயகவுண்டன்பட்டி வாழை விவசாயி லோகநாதனுக்கு, சொட்டு நீர்ப் பாசனம் மூலம் 282 பழங்கள் கொண்ட 68 கிலோ ஜி 9 வாழை உற்பத்தி செய்தமைக்காக விருது மற்றும் பாராட்டுச் சான்று வழங்கப்பட்டது.இதே போல், தொட்டியம் விவசாயி முத்துக்குமாருக்கு, வாழை சோலார் ட்ரையரை அமைத்து வாழை உலர் பழம் தயாரித்ததற்காகவும், தேனிமாவட்டம் கூடலூர் அஹமத் மீரானுக்கு ஆண்டுக்கு ரூ.1 கோடி வருமானம் ஈட்டியதற்காகவும், மேலகல்கண்டார் கோட்டை கிருஷ்ணகுமாருக்கு, ஏழரசி வாழையில் அடர்நடவு முறையை செயல்படுத்தி அதிக மகசூல் எடுத்ததற்காகவும், கேரள மாநிலம் திருவனந்தபுரம் வினோத்துக்கு, 167 அரிய வகை வாழை ரகங்களை வளர்த்து பாதுகாத்து வருவதற்காகவும்,புதுச்சேரி முத்துவெங்கடபதிக்கு, வாழை சாகுபடியில் துல்லிய பண்ணையம் முறையினை செயல்படுத்தி முன்னோடி விவசாயியாக இருந்ததற்காகவும் உள்ளிட்ட 8 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.திருச்சி, : விஞ்ஞானிகள் வறட்சியை கட்டுப்படுத்தும் திட்டங்களை கண்டறிந்து மகசூலை அதிகரிக்க வேண்டும் என்று தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் முஸ்தபா தெரிவித்தார்.தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் 21ம் ஆண்டு நிறுவன நாள் மற்றும் விவசாயிகள் தினவிழா திருச்சி அடுத்த தாயனூரில் உள்ள வாழை ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்றது.விழாவுக்குத் தலைமை வகித்த தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் முஸ்தபா பேசியதாவது: நடப்பு ஆண்டு பருவ மழையின் அளவு 25

சதவீ தம் குறைவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் வறட்சியை கட்டுப்படுத்தக்கூடிய பல திட்டங்கள் முன்கூட்டியே வகுத்து மகசூலை அதிகரிக்க வேண்டும். ஒரு காலத் தில் பருத்தி இறக்குமதி செய்து வந்தோம். தற்போது ஏற்றுமதி செய்யப்படுகிறது. மரபணுமாற்றம் அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என் றார். விழாவில் வேளாண் துறை முன்னாள் அமைச் சரும், எம்எல்ஏவுமான கு.ப.கிருஷ்ணன் வாழ்த்திப் பேசியதாவது:தேசிய வாழை ஆராய்ச்சி மையம் முதலில் ஒடிசா மாநிலத்தில் அமைய இருந்தது. அப்போதைய அதிமுக ஆட்சியில் வேளாண் அமைச்சராக இருந்த நான் டெல்லியில் 11 நாட்கள் முகாமிட்டு போராடினேன். இதைத் தொடர்ந்தே தமிழகத்துக்கு அதுவும் திருச்சி தாயனூருக்கு கொண்டு வரப்பட்டது. வாழையில் பூச்சித் தாக்குதல் ஏற்படும் போது அதை தடுப்பதற்கான மருந்து செலவினங் களால் விவசாயிகளுக்கு வருவாய் குறைகிறது. மரபணு மாற்றம் குறித்து விஞ்ஞானிகள் முழுமை யாக ஆராய்ச்சி செய்து விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கலெக்டர் (பொ) தர்ப்பகராஜ், சாதனை படைத்த விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கி, தேசிய வாழை ஆராய்ச்சி மையம் சார்பில் அச்சிடப்பட்ட விவசாயிகளுக்கான கையேடு களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதைத் தொடர்ந்து, கடந்த 20 ஆண்டுகளாக ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்ட தும், வறட்சியை தாங்கி வளரக்கூடியதுமான வாழை சாகுபடி குறித்தும், வறட்சியை எதிர்கொள்ளும் பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்தும் விவாதம் நடைபெற்றது.முன்னதாக, முதன்மை விஞ்ஞானி பத்மநாபன் வரவேற்றார். முதன்மை விஞ்ஞானி தங்கவேலு நன்றி கூறினார். காவிரி டெல்டா பாசன நலச் சங்கம் செயல் தலைவர் ராஜாராம், செயலாளர் காந்தி பித்தன், தீட்சிதர் பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்டம் முழுவதில் இருந்து வாழை சாகுபடியாளர்கள் மற்றும் வாழை சார் தொழில்முனைவோர் திரளாகக் கலந்துகொண்டனர்.